மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண். 95/2017</u>

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அசோக் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>29.08.2024 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கிழமேல் சாலையில் இருந்து தென்வடலாக ஒரு வண்டி பாதை செல்கிறது என்றால் சரிதான். அந்த வண்டி பாதை சுமார் 50-60 ஆண்டுகளாக நிலையில் உள்ளது என்றால் ஆமாம். அந்த வண்டி பாதையை எந்த வருடம் உட்பிரிவு செய்தார்கள் என்றால் 1986ஆம் ஆண்டு. அந்த வண்டி பாதையின் ரீசர்வே எண். 781/1 என்றால் சரிதான். வண்டி பாதையை உட்பிரிவு செய்யப்பட்ட போது அது சம்பந்தமாக வருவாய் துறையில் இருந்து சம்பந்தபட்ட அனைவருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு உட்பிரிவு செய்யப்பட்ட சமயத்தில் தரப்பினர்கள் அனைவரும் அந்த இடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். உட்பிரிவு செய்தது சம்பந்தமாக தரப்பினர்கள் வருவாய் துறையில் மேல்முறையீடு செய்ததாக எங்களுக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை

என்றால் சரிதான். தென்வடல் வண்டிபாதைக்கு கிழபுறத்தில் தங்கமுத்து பூமி உள்ளது. அந்த பூமி ஓரத்தில் கல்கட்டு அடுக்கி அத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வண்டி பாதையின் மேல்புறம் என்ன அமைப்பு உள்ளது என்றால் கம்பி வேலி போடப்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக வண்டி பாதையை பொறுத்து இந்த வழக்கை தவிர வேறு வழக்கு ஏதும் இல்லை என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரனை</u>

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரனை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2024.08.29 18:08:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்